Arc/3325/web

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

AU/SSP/2022 நாள் 27.05.2022

**சுற்றறிக்கை**

**பொருள்:** கல்வி - ஊக்கத்தொகை (ரூ. 1,00,000) 2021-2022-ஆம் கல்வியாண்டு முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் SC/ST/SCC மாணவ/மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் மாணாக்கர்கள் / துறைத்தலைவர்கள் / நெறியாளர்கள் பின்பற்ற வேண்டிய அரசு நடைமுறை - தொடர்பாக.

**பார்வை:** 1. அரசாணை நிலை எண். 96, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (ஆதி.ந. 3) துறை, நாள்: 25.11.2022.

2. ந.க. எண். 23/30332/2022 dt. 05.05.2022.

ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை அவர்கள் தெரிவித்த கீழ்கண்ட தகவல்கள் தங்களது கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

(அ) 2021-2022-ஆம் கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் SC/ST/SCC மாணவ/மாணவியர்கள் 2021-2022-ஆம் ஆண்டிற்கான ஊக்கத்தொகை பெற 10.06.2022 **அன்று மாலை 5.45 மணிவரை** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆதிதிராவிட நலத்துறை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலும் மாணவ/மாணவியர்கள் முந்தைய ஆண்டுகளில் இருவேறு திட்டங்களில் பயன் பெற்றிருக்கும் நேர்வில் H மற்றும் H1 பிரிவுகளை தொடர்பு கொண்டு குறைவாக பயன் தரும் திட்டங்களில் பெறப்பட்ட தொகையினை கேட்டறிந்து அத்தொகையினை அரசு கணக்கில் கருவூலம் வழியாக SBI வங்கியில் செலுத்தப்பட்டு அதற்குரிய செலுத்து சீட்டின் நகலை விண்ணப்பத்தில் இணைக்கப்பட வேண்டும். செலுத்து சீட்டு இணைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்று ஆதிதிராவிட நலத்துறை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) துறைத்தலைவர்கள் / நெறியாளர்கள் மற்றும் Ph.D. பாடப்பிரிவு தொடர்புடைய அலுவலர்கள் கவனத்திற்கு. மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் உள்ள அனைத்துத் தகவல்களும் சரியானது மற்றும் உண்மையானது என்றும். வேறு உதவித்தொகை திட்டங்களில் இத்திட்டம் உட்பட மாணவர் பயன்பெறவில்லை என்று உறுதி செய்வதுடன் முந்தைய ஆண்டுகளிலும் இருவேறு திட்டங்களில் பயன்பெற்றிருக்கும் நேர்வில் குறைவான பயன்தரக்கூடிய திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகையை மாணவர்களால் திருப்பி அரசு கணக்கில் செலுத்தப்பட்டு அதற்குரிய செலுத்துச்சீட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளதா போன்ற அனைத்து விபரங்களையும் சரிபார்ப்பதுடன் கல்வி ஊக்கத்தொகை விண்ணப்ப படிவத்தில் வ.எண். 25-ல் அ முதல் ஊ வரை மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விபரங்கள் மற்றும் விண்ணப்ப படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் சரியானது மற்றும் உண்மையானதுதானா என்று

திருப்புக

துறைத்தலைவர்கள் மற்றும் நெறியாளர்கள் பரிசீலனை செய்வதுடன், கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்களை பரிசீலனை செய்து **துறைத்தலைவர் மற்றும் நெறியாளர்கள் சான்றிதழ் அளித்தால் மட்டுமே, அரசிடமிருந்து கல்வி உதவித்தொகை பெற முடியும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது**. மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பிக்கும்போது அவ் விண்ணப்பத்தில் ஏதேனும் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பின் **அவ்விண்ணப்பத்தை பரிந்துரை செய்பவரே முழுபொறுப்பு** ஆவார் என்று இச்சுற்றறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் 2021-2022-ஆம் கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்கு இவ்வாண்டுக்குரிய Post Matric Scholarship மற்றும் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகையை அரசு நேரடியாக மாணாக்கர்களின் வங்கி கணக்கிற்கே செலுத்தப்பட்டுவிட்டது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இது தொடர்பாக வேறு ஏதேனும் தகவல்கள் தேவைப்பட்டால் பல்கலைக்கழகத்தில் உள்ள H மற்றும் H1 பிரிவுகளில் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. (விண்ணப்பம் பதிவிறக்கம் செய்ய வேண்டிய அரசு மின்னஞ்சல் முகவரி "www.tn.gov.in/forms/deptname/ "

குறிப்பு

i) இக்கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் தகவல்களை H மற்றும் H1 பிரிவுக்கு துறைத்தலைவர் வழியாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

ii) துறைத்தலைவர் / நெறியாளர்கள் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணபங்களில் தவறான தகவல்கள் இருந்து அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு H மற்றும் H1 அலுவலகம் பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துகொள்ளப்படுகிறது.

iii) மாணாக்கர்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக முந்தைய ஆண்டுகளில் (வருடம் குறிப்பிட்டு) இருவேறு கல்வி உதவித்தொகை பெறவில்லை என்று உறுதிமொழி கடிதம் பெற்று அக்கடிதத்தினை துறையில் பராமரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது (இக்கடிதம் தணிக்கைத்துறை ஆய்விற்கு உட்பட்டது)

31/13 21/3/22

பதிவாளர் (பொ)

20/3/22 2/2

நகல்

1. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3. அனைத்து புல முதல்வர்கள்
4. அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் ஆய்வு நெறியாளர்கள்
5. கல்விசார் ஆராய்ச்சி மையம் இயக்குநர் (DARE)
6. அலுவலகக் கோப்பு

இச்சுற்றறிக்கையினை அனைத்து துறைகளில் உள்ள அறிவிப்பு பலகை வாயிலாக மாணவர்களுக்கு தெரிவித்திட வேண்டப்படுகிறது

இணைப்பு: ஆதிதிராவிடர் நல ஆணையரக கடித நகல்

பதிவஞ்சல் மூலம்

ஆதிதிராவிடர் நல ஆணையரகம்

27353

அனுப்புநர்
திருமதி.சோ.மதுமதி.இ.ஆ.ப.,
ஆணையர்,
ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
சென்னை -05.

பெறுநர்
முதல்வர்/ பதிவாளர்,
இணைப்பில் கண்டுள்ளபடி.

H' Sec

ANNAMALAI ... DARE
11 MAY 2022
DIRECTOR

ந.க.எண் உ_3/ 30332/2022 நாள். 05.05.2022

அய்யா /அம்மையீர்,

OFFICE OF THE REGISTRAR
09 MAY 2022
ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR 608002

பொருள்: கல்வி - ஊக்கத்தொகை - 2021-2022 ஆம் கல்வியாண்டு - முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் - தொடர்பாக

பார்வை: 1. அரசாணை (நிலை) எண் 96, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை, நாள். 25.11.2022.

-----

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி, 2021-2022 ஆம் கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க **04.05.2022 முதல் 10.06.2022** அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

அனைத்து மாணாக்கர்களும் திட்டம் தொடர்பான விதிமுறைகளை அறிந்து கொள்ளவும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கி, கல்வி ஊக்கத் தொகை வேண்டி விண்ணப்பிக்க ஏதுவாக இத்திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான அரசு இணைய தளத்தில் ("www.tn.gov.in/forms/deptname/1") வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் 10.06.2022 ஆம் தேதிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும், **ஊக்கத் தொகைக்கான விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் ஒரு கலம் பூர்த்தி செய்யப்படாமல் விடுபட்டிருந்தாலும், இதர சான்றுகள் ஏதேனும் இணைக்காமல் விடுபட்டிருந்தாலும், பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது** (விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்) எனவும்

தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தாங்கள் தங்களது அலுவலக விளம்பர பலகையில் மேற்படி செய்தியினை வெளியிடவும், **தங்களது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் மேற்படி விபரத்தினை தெரிவிக்கவும்**, அவ்வாறு தெரிவிக்கப்பட்டதற்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சில கல்லூரிகள், மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பத்தினை பெற்று, கல்லூரியிலிருந்து அனுப்புவதாக தெரிவித்து, காலம் கடந்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். அவ்வாறு காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட மாட்டாது. காலம் கடந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு கல்லூரியின் முதல்வரே முழு பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானதா எனவும், வேறு கல்வி உதவித் தொகை திட்டங்களில் இத்திட்டம உட்பட மாணவர் பயன்பெறவில்லை என்பதை உறுதி செய்திடவும் முந்தைய ஆண்டுகளில் இருவேறு திட்டங்களின் பயன் பெற்றிருக்கும் நேர்வில் குறைவான பயன் பெற்ற திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகை மாணவரால் திருப்பி செலுத்தப்பட்டு அதற்குரிய செலுத்துச் சீட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளதா போன்ற விபரங்கள் அனைத்தையும் கல்லூரி முதல்வர் பரிசீலனை செய்து விண்ணப்பங்களை பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு

**2020-2021 ஆம் ஆண்டு முழுநேர முனைவர் கல்வி பயின்ற மாணாக்கர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க வடிவமைக்கப்பட்ட விண்ணப்பத்தினையே மாணாக்கர்கள் பயன்படுத்தி 2021-2022 ஆம் கல்வியாண்டு கல்வி ஊக்கத் தொகை பெற விண்ணப்பித்திருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என மாணாக்கர்களுக்கு தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

ஒம்/-சோ.மதுமதி,
ஆதிதிராவிடர் நல ஆணையர்.

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக.